## மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

**முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,**
**மாவட்ட நீதிபதி**

**2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22–ஆம் நாள் புதன்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2057 சித்திரைத் திங்கள் 09–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண் . 484/2024 –இல்**
**வழக்கிடை விண்ணப்ப எண் 03/2025**

**T.A.இனியன்** ..**மனுதாரர்/பிரதிவாதி**

**–எதிர்–**

**01. K. மாதேசன்**
**02. ரத்தினம்மாள்** ...**எதிர்மனுதாரர்கள்/வாதிகள்**

இந்த மனுவில் மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு A.M.C.பெரியசாமி** அவர்களும் எதிர்மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு S. சம்பத்** அவர்களும் தோன்றினர். இந்த மனு இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது இரு தரப்பினரும் முன்வைத்த வாதங்களை கவனத்தில் வைத்தும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையிலிருந்த இந்த மனுவில் இன்று இந் நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கிறது.

### ஆணையுரை

### முகவுரை

வழக்குச் சொத்தின் இயற்பியல் தோற்றத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல்செய்வதற்காக நீதிமன்ற ஆணையரை நியமிக்கக் கோரி மனுதாரர்/ பிரதிவாதி உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 26-ஆம் வகுமுறையின் 09-ஆம் விதியின்கீழ் இந்த மனுவைத் தாக்கல்செய்துள்ளார்.

### மனுவின் சுருக்கம்

01. தாரமங்கலம் ஊர் புல எண் 155/1, 155/2 ஆகியவற்றில் உள்ள இடத்தைப் பொறுத்து நிரந்தர தடையுறுத்துக் கட்டளை நிவாரணங்களுக்காக எதிர்மனுதாரர்கள்/வாதிகள் முதலேற்பு வழக்கைத் தொடுத்துள்ளனர். புல

IIIrd ADJ Court, Salem

எண் 155/1-இல் அடங்கிய 7-1/2 சென்ட் ஒரு பகுதியும் ½ ஒரு பகுதியும் என மொத்தம் 8 சென்ட் இடம் செங்குந்தர் திருமண மண்டபம் கட்ட விடப்பட்டுள்ளது. அந்த இடம் மனுதாரர்/பிரதிவாதிக்கு சொந்தமானது.

02. எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு வழக்குச் சொத்து இருக்கும் பகுதியில் சொத்து ஒன்றை விற்ற சஞ்சய் M.சாவ்லா மற்றும் அம்மணி அம்மாள் ஆகியோர் கையொப்பம் இட்டதுபோன்று பாக பிழைத்திருத்தல் பத்திரம் என்றதொரு ஆவணத்தை எதிர்மனுதாரர்கள்/வாதிகள் புனைந்து கொண்டு புல எண் 155/1-இல் அடங்கிய 8 சென்ட் இடத்தை ஆக்கிரமித்து கட்டுமானம் எழுப்ப முயற்சி செய்கிறார்கள். அந்த சொத்துமீது எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை.

03. மேற்சொன்ன 8 சென்ட் இடம் தற்போது காலியாக உள்ளது. அதில் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் கட்டுமானம் எழுப்ப முயற்சி செய்கின்றனர். அந்த சொத்தின் இயற்பியல் தோற்றத்தை மாற்றிவிட்டால் இந்த வழக்கை முடிவு செய்வதில் சிக்கல்கள் ஏற்படும்.

04. ஆகையால், வழக்குச் சொத்தின் தற்போதைய இயற்பியல் தோற்றம் குறித்து பார்வையிட்டு நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல்செய்ய நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமித்து ஆணையிட வேண்டும்.

## எதிருரையின் சுருக்கம்

05. சஞ்சய் M.சாவ்லா என்பவரும் அம்மணி அம்மாள் என்பவரும் 12.11.2013-ஆம் தேதியன்று எழுதிக் கொடுத்த பாகத் திருத்தல் முச்சலிக்கா ஆவணத்தின்படி புல எண் 155/1, 155/2 ஆகியவற்றில் அடங்கிய இடம் எதிர்மனுதாரர்கள்/ வாதிகளுக்கு சொந்தமானதாகும். அந்தச் சொத்திற்கும்

III rd ADJ Court, Salem

மனுதாரர்/ பிரதிவாதிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. மனுதாரர்/பிரதிவாதி 20 அடியாட்களுடன் 12.05.2024-ஆம் தேதியன்று அந்த சொத்தில் அத்துமீறி ஆக்கிரமிக்கவும் முயற்சிசெய்தார். நிரந்தர தடையுறுத்துக் கட்டளை நிவாரணம் மட்டுமே கோரப்பட்டுள்ள இந்த வழக்குரையில் நீதிமன்ற ஆணையரை நியமிக்கக் கோர முடியாது. மனு சொத்தில் எந்தவித உரிமையும் கொண்டிராத மனுதாரர்/பிரதிவாதி எதிர்மனுதாரர்/வாதியை அலைகழிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். ஆகையால், இந்த மனுவைத் தள்ளுபடிச் செய்ய வேண்டும்,

IIIrd ADJ Court, Salem

**தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்**

06. **இந்த மனு அனுமதிக்கத்தக்கதா?**

**தீர்முடிவு**

07. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. வழக்குரையில் 01-ஆம் இன சொத்தாக புல எண் 155/1-இல் அடங்கிய 7-1/2 சென்ட் இடமும் வழக்கு 02-ஆம் இன சொத்தாக அதே புல எண்ணில் அடங்கிய ½ சென்ட் இடமும் குறிப்பிடப் பட்டுள்ளது. வழக்குச் சொத்து காலியாக இருப்பதாகவும் அதில் மனுதாரர்/ பிரதிவாதி அடியாட்களுடன் அத்துமீறி ஆக்கிரமிக்க முயற்சி செய்ததாகவும் வழக்குரையில் சாட்டுரை செய்யப்பட்டுள்ளது. இதிலிருந்து இந்த வழக்கு தொடுக்கப்படும் நேரத்தில் வழக்குச் சொத்து காலியிடமாக இருந்தது என்பது தெளிவாகிறது. அச்சொத்துமீது எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு உரிமை இருக்கிறதா? இல்லையா? என்பதை வழக்கு விசாரணைக்குப் பிறகே முடிவு செய்ய முடியும். வழக்குச் சொத்தின் இயற்பியல் தோற்றம்

என்ன என்பதை வாதியே வழக்குரையில் தெளிவாக ஒப்புக்கொண்டுள்ள நிலையில் அதற்கு பின்னிட்டு கட்டுமானம் ஏதேனும் எழுப்பிவிட்டாலும் அது வழக்கிற்குப் பிறகு எழுப்பப்பட்டது என்றே சொல்ல முடியும். ஆகையால், வழக்குச் சொத்தின் இயற்பியல் தோற்றம் குறித்து பார்வையிட நீதிமன்ற ஆணையரை நியமிப்பது இந்த வழக்கில் உள்ள பிரச்சனை எதையும் முடிவு செய்ய அவசியமாக இருக்காது என்றே இந் நீதிமன்றம் கருதுகிறது. ஆகையால், இந்த மனுவை அனுமதிப்பதற்கு முகாந்திரம் இல்லை என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

**இறுதிமுடிவு**

08. இறுதியாக, இந்த மனு தள்ளுபடிச் செய்யப்படுகிறது.

**இந்த ஆணையுரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

PUGAZHENTHI V Digitally signed by PUGAZHENTHI V
Date: 2026.04.22 19:11:31 +0530

**மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிபதி,**
**சேலம்.**

**இணைப்பு:–** இல்லை

III rd ADJ Court, Salem